

சென்னை, பூங்கா நகர், காமாட்சி அம்மன் உடனுறை ஏகாம்பரேஸ்வரர் க்கோயிலில் நடைபெற்று வரும் ப்பணிகளை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (16.08.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி. பழனி, பொ. ஜெயராமன், மண்டல இணை ஆணையர் மதி ஜ.முல்லை, துணை ஆணையர் இரா.ஹரிஹரன், உதவி ஆணையர் க.சிவக்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.ரவிச்சந்திரன், கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ஜே.அசோக்குமார் முந்திரா, அறங்காவலர்கள். ப. வெங்கடேசன், பு.நலேந்திர குமார், மதி பா. சசிகலா, ம. முத்துகுமார், செயல் அலுவலர் இரா. முத்துசாமி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி பருத்திப்பட்டு பகுதியில் அமைந்துள்ள தூய விண்ஏற்பு அன்னை ஆலயத்தில் 50வது ஆண்டு பொன் விழா நிகழ்ச்சிநடைபெற்றது இதில் தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பங்கேற்றார். உடன் மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ் பகுதி கழக செயலாளர் ஜி. நாராயண பிரசாத் வட்டக் கழக செயலாளர் வின்சென்ட் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# பூங்கா நகர், ஏகாம்பரேஸ்வரர் கோயில் குடமுழுக்கு முன்னேற்பாடு பணிகள்!

## அமைச்சர் பி. கே.சேகர்பாபு நேரில் பார்வையிட்டு ஆய்வு!

சென்னை, ஆக.17-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் நேற்று (16.08.2025) சென்னை, பூங்கா நகர், காமாட்சி அம்மன் உடனுறை ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திருப்பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி, காவல்துறை, பொதுப்பணித் துறை, தமிழ்நாடு மின் பகிர்மான கழகம், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, இந்து சமய அறநிலைத்துறை அலுவலர்களுடன் முன்னேற்பாடு பணிகள் குறித்து கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில், பூங்கா நகர் ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலுக்கு சுமார் ரூ.10 கோடி மதிப்பீட்டில் கருங்கல் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற ஆகஸ்ட் மாதம் 21 அன்று குடமுழுக்கு நடத்தப்பட உள்ளது. இக்குடமுழுக்கிற்கு சுமார் 5,000க்கும் மேற்பட்ட பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பக்தர்கள் எளிதாகவும் விரைவாகவும் தரிசனம் மேற்கொள்ளும் வகையில் வரிசை முறையினை ஏற்படுத்தி, துறை சார்ந்த செயல் அலுவலர்களை சுழற்சி முறையில் பணியமர்த்தம் செய்திட வேண்டும். பக்தர்களுக்கு தேவையான தரமான உணவு மற்றும் குடிநீர் பாட்டில்கள் திருக்கோயில் நிர்வாகத்தின் சார்பில் வழங்கிடவும், குடமுழுக்கு விழாவில் பங்கேற்கும் பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதப்பை வழங்கிடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாநகராட்சியின் சார்பில் தற்காலிக கழிப்பிடங்கள் மற்றும் குப்பை தொட்டிகள் வைப்பதோடு, குப்பைகளை உடனுக்குடன் அகற்றிட வேண்டும். பாதுகாப்பு பணியில் 200க்கும் மேற்பட்ட காவலர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இரண்டு இடங்களில் மருத்துவ முகாம்கள் அமைக்கப்படுவதோடு அவசரகால ஊர்தி மற்றும் தீயணைப்பு வாகனங்கள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

குடமுழுக்கு விழாவிற்கு வருகை தரும் பக்தர்கள் மன நிறைவோடு தரிசனம் செய்து திரும்புகின்ற வகையில் அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது இந்து சமய அறநிலைத்துறை கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி.பழனி, பொ.ஜெயராமன், மண்டல இணை ஆணையர் திருமதி ஜ. முல்லை, துணை ஆணையர் இரா.ஹரிஹரன், உதவி ஆணையர் க.சிவக்குமார், காவல் உதவி ஆணையர் லோகநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி உதவி பொறியாளர் கார்த்திக், திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ஜே.அசோக்குமார் முந்திரா, அறங்காவலர்கள் ப.வெங்கடேசன், பு.நலேந்திர குமார், திருமதி பா. சசிகலா, ம.முத்துகுமார், செயல் அலுவலர் இரா. முத்துசாமி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்,

### எரிமலை பி.எல்.பாலசுப்பிரமணியம் ஏற்பாடு !

# எஸ்.பி.சற்குணபாண்டியன் 9ஆம் ஆண்டு நினைவு நாள் ! 500 நபர்களுக்கு உணவு !

## டி.கே.எஸ்.இளங்கோவன் ஆர்.டி.சேகர் ஜே.ஜே.எபினேசர் இரா.லட்சுமணன் பங்கேற்பு !

சென்னை, ஆக.17

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் பகுதி எரிமலை பி.எல்.பாலசுப்பிரமணியம் ஏற்பாட்டில் முன்னாள் கழக துணை பொதுச்செயலாளர், முன்னாள் அமைச்சர் எஸ்.பி.சற்குணபாண்டியன் 9ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு (13.08.2025 புதன்கிழமை) பகல் 1.00 மணியளவில் புதுவண்ணை, கிராஸ்ரோடு பூங்கா அருகில் மலர் அஞ்சலி செலுத்தி 500 ஏழை எளியோருக்கு அறுசுவை உணவு வழங்கபட்டது.

கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பகுதிச்செயலாளர் இரா.லட்சுமணன், ஆகியோர் அறுசுவை உணவு வழங்கினர்.

த.தமிழ்கொடி, கு. நற்குணம், கட்பீஸ் ப.சோமசுந்தரமூர்த்தி, இர.பொன்இளவரசன், வெ.சு.சத்தியநாராயணன், ஏ.டி.மணி, ப.ஆ.சண்முகம், எஸ்.கே.இளங்கோ, எஸ்.பி.எஸ்.புத்தன், என். பிரேமதாசன், ப.கோதண்டன், என்.அனிபா, ஆர்.டி. ராஜா, கே.பி.சதிஷ்குமார், கு.ரமேஷ், என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா.கோதண்டன், மா.நாகராஜ், பொ.து.ராஜா, ச.தமிழ்செல்வன், ஜெ.பிரேம்ஆனந்த், வி.முத்து, பி.அன்பழகன், எம்.எம்.சாமி, சா. திருப்பதிசாமி, டி.ஆர்.தணிகாசலம், ஜெ.சுரேஷ்பாபு, எஸ்.எம்.டி.ரவிச்சந்திரன், இ.பிராகசம், லைலண்ட் கே.மோகன், டி.லெலின், ஜி.ராஜா, மீஞ்சூர் ஜி.முகுந்தன், கே.முத்தமிழ்செல்வன், இ.கார்த்திக், வி.கார்த்திக், ஆர்.மூர்த்தி, கா.பா.சாமி, கட்பீஸ் ப.தீனதயாளன், கே.கண்ணகி கருணாநிதி, டி.மனோகரன், ஜி.ராஜ்குமார், மு. ராஜேஷ், பி.ரங்கநாதன், எஸ்.கிருஷ்ணசாமி, எஸ். துரை, டிஎல்பி ரவி, என்.பி. தனுசு, கே.அடைக்கலம், பிரஸ் ஆர்.ரங்கநாதன், என். செல்வம், ஜி.துரைசாமி, எம். சதிஷ்குமார், ஆர்.பாலசந்தர், எம்.எஸ்.ரவி, க்ரீதர், எம். கிருஷ்ணன், போட்டோ எம்.மூர்த்தி, தி.விஜயகுமார், ஆர்.வெங்கட், எஸ்.எம்.முருகன், ஜி.பிரேம்குமார், பி.பத்மாநாபன், அ.பிரான்சிஸ், டி.மணிமாறன், தமிழ்சிவா, எஸ்.கவியரசு, எம்.ஜெயச்சந்திரன், திருநாவுக்கரசு, நாகமுத்து, செல்ராஜா, கே.ஜி. சங்கர், சைக்கிள் கடை எஸ். நடராஜன், பூக்கடைசீனு, பேனர் எஸ்.சரவணன், மீடியாராஜ்குமார், கட்பீஸ் எல். ராஜீ, என்.பாட்ஷா, என்.சரபத், இ.பிரேம்குமார், லோகநாதன், கே.அயூப்கான், டி.துரை குருமூர்த்தி, எம். சுரேஷ்குமார், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

எஸ்.தனக்கோட்டி, கே. சாம்சன், கே.கண்ணகி கருணாநிதி, ஆகியோர் நன்றி கூறினர்.

### சிவகங்கையில் மாவட்ட முன்னாள் துணை செயலாளர்

# கே.எஸ்.எம்.மணிமுத்து ஓராண்டு நினைவு நாள்

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், மு.தென்னவன் - கழகத்தினர் நினைவஞ்சலி!

சிவகங்கை, ஆக.17 .

சிவகங்கை மாவட்ட கழக முன்னாள் துணை செயலாளர், காஞ்சிரங்கால் ஊராட்சி மன்ற தலைவர், சிவகங்கை நகர்மன்றதுணைத் தலைவர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினராக இருந்தவர் கே.எஸ்.எம்.மணிமுத்து இவர் கடந்தாண்டு 2024 ஆகஸ்ட் 15ஆம் தேதி சிவகங்கையில் மரணமடைந்தார். அவரது நினைவினை போற்றும் வகையில் நேற்று முன் தினம் 15ம்தேதி சிவகங்கை மாவட்ட தி.மு.க. சார்பிலும் மணிமுத்து குடும்பத்தார் சார்பிலும் ஓராண்டு நினைவஞ்சலி கூட்டம் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே. ஆர். பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மணிமுத்துவின் திருஉருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார் .அவரை தொடர்ந்து முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மணிமுத்து மனைவி மலர் விழி, மகள்கள் ரெசினா பானு, நமுனப்ரியா, மருமகன் பிரபு பிறைசூடன் , கொத்த மங்கலம் சேது உட்பட மணிமுத்து குடும்பத்தினர் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். அதை தொடர்ந்து நினைவேந்தல் நிகழ்ச்சி அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது. அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மணி முத்துவிற்கு புகழாரம் சூட்டி சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மூ.தென்னவன், மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கைமாறன், திருமதி ஜோன்ஸ் ருசோ, நகர் கழகச் செயலாளர்கள் சி.எம். துரை.ஆனந்த், க.பொன்னுச்சாமி, ஒன்றிய செயலாளர்கள் திருமலை முத்துராமலிங்கம், நா.நெடுஞ்செழியன், மா. அண்ணாத்துரை, பவானி கணேசன், மாவட்ட ஆதிராவிடர் குழு தலைவர் கொத்த மங்கலம் சேது, அமைப்பாளர் சிங்கமுத்து, முன்னாள் எம்.எல்.ஏ. எஸ்.மாரியப்பன் கென்னடி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளர் தமிழ் பிரியா, வழக்கறிஞர்கள் ஆதி.அழகர் சாமி, துஷாந்த் பிரதீப் குமார், திராவிட கழகம் வழக்கறிஞர் எஸ்.இன்பலாதன், முன்னாள் மாவட்ட காங்கிரஸ் தலைவர் எம்.ராஜரத்தினம், விடுதலைச் சிறுத்தைகள் மலைச்சாமி ஆகியோர் நினைவஞ்சலி செலுத்தினார்கள். ஓய்வுபெற்ற துணை வட்டாட்சியர் காடனேரி புஷ்பவல்லி கவிதை வாசித்தார்.

இந்த நினைவேந்தல் நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் எம்.ஜெயராமன் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ் .நாராயணன், தொ.மு.ச. முருகேசன் ,வழக்கறிஞர் வினோத், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எஸ்.பாஸ்கரன்,ஆர்.பிரபாகரன், சார்புஅணி நிர்வாகிகள் சேவியர் ,ஆர்.கோதண்டபானி, சுப.ஜெயகுமார், ருக்மாசர வணன், ஒய்கா.சோமு, அண்ணாமலை, மகளீரணி மஞ்சுளா, மார்கரெட் கமலா, ராஜேஸ்வரி , எஸ்.முத்துக்குமார் உட்பட மாவட்டம் முழுவதிலு மிருந்து கழக நிர்வாகிகள், சார்புஅணி நிர்வாகிகள், மணிமுத்துவின் குடும்பத்தினர் கலந்து கொண்டார்கள்

நிகழ்ச்சியில் மாவட்ட கழகத்தின் சார்பில் நலிவுற்றவ100நபர்களுக்கு வேட்டி சேலைகளை அமைச்சர் கே. ஆர்.பெரியகருப்பன், மு. தென்னவன், திருமதி மலர் விழி மணிமுத்து ஆகியோர் வழங்கினார்கள். மாவட்ட செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார்.திருமதி ரெசினாபானு நன்றி கூறினார்.



எழும்பூர் வடக்கு பகுதி தி.மு.க.சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு தலைவரின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி 300 நபர்களுக்கு அறுசுவை உணவை சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆலோசனைப்படி பகுதி செயலாளர் சொ.வேலு எம்.சி, தொகுதி பார்வையாளர் டாக்டர் ப.நீ.யாழினி ஆகியோர் வழங்கினர்.நிகழ்ச்சி ஏற்பாட்டினை ஆதிதிராவிடர் நலக்குழு பகுதி அமைப்பாளர் எம்.ஆர்.சரவணன் செய்திருந்தார்.உடன் வட்ட கழக செயலாளர் வி.அபாய், எம்.தில்லைகுமார் LIC.டிகர்ணா, விஜயராஜ், குமரவேல்,குப்பன் , வெங்கடேசன்,ஆரோகியம்,ராஜா,பழனி,ரபிக்,ரவி,முரளிதரன்,ராஜேஷ்,ஜெயகுமார், யாசர்அராபத், சரன்ராஜ், பன்னீர்செல்வம்,சுடர்,கலைவாணன், பி.நாகேந்திரன், சத்தியவாணி, உள்ளிட்ட அனைத்து கழகத்தினர் பங்கேற்றனர்.




கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்கள் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து திருவள்ளூர் மத்திய மாவட்ட திருநின்றவூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு நியாய விலைக்கடை பகுதியில் இத்திட்டத்தைஅமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆலோசனை படி நகர மன்ற தலைவர் உஷாராணிரவி தொடங்கி வைத்து, வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வீடுகளுக்கே நேரில் சென்று குடிமைப் பொருட்களை வழங்கினார் அருகில் நகர செயலாளர் தி.வை.இரவி உள்பட பலர் உள்ளனர்.

# மாணவிகள் உயர்ந்த நிலைக்கு வருவதற்கு விடாமுயற்சி தேவை!

## செஞ்சியில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேச்சு!

செஞ்சி, ஆக. 17-

மாணவிகள் உயர்ந்த நிலைக்கு வருவதற்கு விடா முயற்சி தேவை என செஞ்சி அரசு மகளிர் மேல் நிலைப் பள்ளியில் முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி சிறப்புரையாற்றினார்.



நாட்டின்79வது சுதந்திர தின நாள் திருவிழா இன்று நாடு முழுவதும் கோலாலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில்நாட்டின்79 வது சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது இதை முன்னிட்டு செஞ்சி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் தேசியக் கொடி ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது.

செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் முன்னிலை வகித்தார். பள்ளி தலைமை ஆசிரியர் செந்தில் குமார் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தேசிய கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார் .தொடர்ந்து சுதந்திர தினவிழாவைமுன்னிட்டு சிறப்புரையாற்றி பள்ளி ஆசிரியர்களுக்கு சால்வை அணிவித்து சுதந்திர தின வாழ்த்துக்களை தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில்:

இன்று நாடு முழுவதும் 79 ஆவது சுதந்திர தின விழா சீரும் சிறப்புமாக கொண்டாடப்பட்டு வருகிறது நாடு முழுவதும் சுதந்திர தினத்தில் முதலமைச்சருக்கு தேசிய கொடியினை ஏற்றி வைக்கும் உரிமை பெற்றுக் கொடுத்தவர் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் ஆவார். அவர் வழியில் ஆட்சி செய்யும் தமிழ் நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்கல்வியும், சுகாதாரமும் தனது இரண்டு கண்களாக எண்ணி கல்வித் துறைக்கும் மருத்துவத்திற்கும் எண்ணற்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் இல்லம் தேடி கல்வி, புதுமைப்பெண் திட்டம்,தமிழ் புதல்வன், நான் முதல்வன்,முதலமைச்சரின் காலை சிற்றுண்டி திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை அறிவித்து உலகமே திரும்பிப் பார்க்கும் வகையில்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். இன்றைக்கு தனியார் பள்ளிகளை மிஞ்சும் வகையில் அரசு பள்ளி கட்டிடங்களை முதலமைச்சர் கட்டுவதற்கு உத்தரவிட்டுள்ளார் அந்த வகையில்இன்று பல்வேறு பள்ளிகளில் அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகிறது.

நம்மிடத்தில் இருந்து திருட முடியாத ஒரு சொத்து கல்வி.இந்த கல்வியை மாணவிகள் நல்ல முறையில் படித்து தங்களின் தாய் தந்தைக்கு நல்ல பெயரை பெற்று தர வேண்டும்.மாணவிகள் உயர்ந்த நிலைக்கு வருவதற்கு விடா முயற்சிகட்டாயம் தேவை எனமுன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ உறுதிபட தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், துரை, பேரூராட்சி மன்றதுணைத் தலைவர் ராஜலட்சுமி செயல்மணி, பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர்கள் மாணிக்கம், திலகவதி,மன்ற உறுப்பினர்கள்அஞ்சலை நெடுஞ்செழியன், லட்சுமி வெங்கடேசன், கார்த்திக்,சீனிவாசன்,ஜான்பாஷா, சங்கர், புவனேஸ்வரி அண்ணாதுரை, மகாலட்சுமி கமலநாதன், சிவகுமார்,அகல்யா சுமித்ரா சங்கர்,சங்கீதா சுந்தரமூர்த்தி, பொன்னம்பலம், நூர்ஜகான் ஜாபர், பள்ளி மேலாண்மை குழு தலைவர்பள்ளி இருபால் ஆசிரியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.பள்ளி உதவி தலைமை ஆசிரியர் தேவதாஸ் அனைவருக்கும் நன்றி கூறினார்.

செஞ்சி பேரூராட்சிஅலுவலகத்தில் சுதந்திர தின விழா:

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சியில் நாட்டின்79வது சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது இதை முன்னிட்டு பேரூராட்சி அலுவலகத்தில் தேசியக் கொடி ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் முன்னிலை வகித்தார்.பேரூராட்சி செயல் அலுவலர் கலையரசி அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் மஸ்தான் கலந்துகொண்டு தேசிய கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சியில் பேரூராட்சி மன்றதுணைத் தலைவர் ராஜலட்சுமி செயல்மணி, மன்ற உறுப்பினர்கள்.சந்திரா அச்சுதன்,அஞ்சலை நெடுஞ்செழியன், லட்சுமி வெங்கடேசன், கார்த்திக், சீனிவாசன்,ஜான்பாஷா, சங்கர், எம்.பி.ஆர்.மோகன், புவனேஸ்வரி அண்ணாதுரை, மகாலட்சுமி கமலநாதன், சிவகுமார், அகல்யா வேலு, சுமித்ரா சங்கர், சங்கீதா சுந்தரமூர்த்தி, பொன்னம்பலம், நூர்ஜகான் ஜாபர், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் செந்தில்குமார்,செந்தில் குமரன், முன்னால் கவுன்சிலர்கள், மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் பேரூராட்சி பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



தாம்பரம் மாநகராட்சி சார்பில் 79–ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மாநகராட்சி அலுவலக வளாகத்தில் மாநகராட்சி ஆணையர் சீ.பாலசந்தர் தலைமையில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன் தேசிய கொடியை ஏற்றிவைத்தும் மாநகராட்சி பள்ளியில் அதிக மதிப்பெண்களை பெற்ற மாணவ மாணவிகளுக்கும் சிறப்பாக பணியாற்றிய தூய்மை பணியாளர்களுக்கும் நற்சான்றிதழ் மற்றும் ஊக்கத் தொகையை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ்,எஸ்.இந்திரன்,வே. கருணாநிதி, ஜோசப்அண்ணாதுரை, துணை ஆணையர் சசிகலா, உதவி ஆணையர் சௌ்ணலதா, ராஜலஷ்மி, செந்தில்குமார்,பெறியாளர்கள். ஞானவேல், வெ.தங்கத்துரை, சங்கர், சத்தியசீலன், அலுவலர்கள் , மாமன்ற உறுப்பினர்கள் நலச் சங்க நிர்வாகிகளும் சுய உதவி குழு மகளிர்களும் பொது மக்களும் பெரும் திராளாக கலந்து கொண்டனர்.